RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

சிவகங்கை | மலர்-5 | இதழ்- 148 | ஜூன்.5 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5







# ரூ.18,600 கோடியில் 3 திட்டங்கள்: முதல்வர் விஜய் முன்னிலையில் எல் அண்ட் டி நிறுவனம் ஒப்பந்தம்

## 8,200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு

சென்னை: ஜூன்.5-

ரூ.18,600 கோடி முதலீட்டில் 8,200 நபர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தமிழ்நாட்டில் எல் அண்ட் டி (லார்சன் - டுப்ரோ) நிறுவனம் மூன்று திட்டங்கள் மேற்கொள்வதற்கு தமிழக முதல்வர் விஜய் முன்னிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

முதல்வர் விஜய் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், தொழில் துறையில் மேற்கொள்ளப்படும் முதல் புரிந்துணர்வு ஒப்பந்தம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான அரசு செய்திக் குறிப்பில், முதல்வர் ச.ஜோசப் விஜய்யை நேற்று (4.6.2026) தலைமைச் செயலகத்தில் இந்தியாவின் மிகப்பெரிய பொறியியல், கட்டுமானம், உற்பத்தி மற்றும் தொழில்நுட்பக் குழுமங்களில் ஒன்றான லார்சன் - டுப்ரோ லிமிடெட் (Larsen & Toubro) நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் எஸ். என். சுப்ரமண்யன் சந்தித்து கலந்துரையாடினார்.

தமிழ்நாட்டில் இந்நிறுவனம் தொடர்ந்து முதலீடுகள் மேற்கொண்டு தொழில் துறையில் வலுவான தடம் பதித்துள்ளதையும், தமிழ்நாட்டில் பரவலாகவும், வெவ்வேறு துறைகளில் மேலும் 18,600 கோடி ரூபாய் முதலீட்டில் 8,200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மூன்று திட்டங்கள் அமைக்க முன்வந்துள்ளதையும் முதல்வர் பாராட்டினார்.

மேலும், தமிழ்நாட்டில் இந்நிறுவனத்தின் எதிர்கால வளர்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டங்களுக்கு மாநில அரசின் முழுமையான ஒத்துழைப்பும், ஆதரவும் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

இந்த சந்திப்பின்போது, லார்சன் - டுப்ரோ லிமிடெட் (L&T) நிறுவனம், தமிழ்நாட்டில் பின்வரும் மூன்று திட்டங்கள் மேற்கொள்வதற்கு




தமிழக முதல்வர் .ச.ஜோசப் விஜய் முன்னிலையில், தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது:

1. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 15,000 கோடி ரூபாய் முதலீட்டில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தகவல் தரவு மைய விரிவாக்கத் திட்டம்.

2. கோயம்புத்தூரில் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின்னணுப் பொருட்கள் மற்றும் மின்னணு அமைப்புகள் உற்பத்தித் திட்டம்.

3. திருவள்ளூர் மாவட்டத்தில், 1,100 கோடி ரூபாய் முதலீட்டில் 5,700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், காட்டுப்பள்ளி லி-ஜி கப்பல் கட்டும்தளம் விரிவாக்கத் திட்டம்.

2036 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1.5 டிரில்லியன் டாலராக உயர்த்த வேண்டும் என்ற முதல்வரின் லட்சிய இலக்கினை எய்துவதற்கான முயற்சியின் மைல் கல்லாக அமைந்துள்ள பல்துறை சார்ந்த இம்முதலீடுகளின் மூலம், மாநிலத்தில் டிஜிட்டல் உள்கட்டமைப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவுச் செயல்பாடுகள் வளர்ச்சி பெறுவதுடன், மின்னணுவியல் உற்பத்தி சூழலமைப்பு மேம்படும். மேலும் காட்டுப்பள்ளி திட்டம், கடலோர காற்றாலை கட்டுருவாக்கத் தொழிலுக்கு உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பைக் கொண்டுவரும்.

இத்திட்டங்கள் செயலாக்கப்படுவதன் மூலம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு பெரிய அளவிலான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன், மாநிலத்தின் பொருளாதாரமும் மேம்படும்.

முதல்வர் விஜய் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், தொழில் துறையில் மேற்கொள்ளப்படும் முதல் புரிந்துணர்வு ஒப்பந்தம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், தொழில்துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா, தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச. விஜயகுமார், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் பு. அலர்மேல்மங்கை, எல் - டி நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் எஸ்.என். சுப்ரமண்யன், முன்முயற்சிகள் மேம்பாட்டுப் பிரிவுத் தலைவர் கே.ஜி.சத்யநாராயணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்துறை ஹார்டு டிஸ்குகள் திருடுபோன விவகாரம்: அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்

சென்னை: ஜூன்.5-

மின் துறை சார்ந்த ஹார்டு டிஸ்குகள் திருடு போனது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த விவகாரத்தில் யாரும் தப்பிக்க முடியாது என மின்சாரத் துறை அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.




இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "மின்துறை தலைமை அலுவலகத்தின் முக்கியமான துறைகளில் இருந்த ஒருசில ஹார்டு டிஸ்குகள் திருடப்பட்டுள்ளன. கடந்த 5 ஆண்டு கால ஒப்பந்தங்கள் குறித்த ஆவணங்கள் திருடப்பட்டுள்ளன.

ஒப்பந்த தொழிலாளர்களின் நியமனம் தொடர்பான ஆவணங்களையும் காணவில்லை. எத்தனை ஹார்டு டிஸ்க்குகள் திருடப்பட்டுள்ள என்பது குறித்த கணக்கெடுப்பு பணி நடைபெறுகிறது. தற்போது எதையும் தெரிவிக்க முடியாது.

இது தொடர்பான விசாரணை தீவிரமாக நடைபெற்று வருகிறது. எதனால் திருடப்பட்டன. அவர்களின் நோக்கம் என்ன? இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என முழுமையான விசாரணைக்கு முடுக்கிவிடப்பட்டுள்ளது. கடந்த மாதம் சிலரை பணியிடை நீக்கம் செய்தோம், அதன்பிறகு இது நடந்ததா என சந்தேகம் வருகிறது. இந்த விவகாரத்தில் யாரும் தப்பிக்க முடியாது.

செந்தில் பாலாஜி இருந்த காலத்தில் தான் டிரான்ஸ்பார்மர் ஊழல் நடந்தது. டிரான்ஸ்பார்மர் ஊழல் குறித்து விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மின் தடையை சீரமைக்க இன்னும் கால அவகாசம் வேண்டும். அனைத்தையும் சீரமைக்க ஒரு மாத காலம் போதாது.

மின்சார துறையில் கடன் இருக்கிறது; பணியாளர்கள் பற்றாக்குறை இருக்கிறது. கடந்த ஆட்சியில் பராமரிப்புப் பணிகள் சரியாக செய்யப்படவில்லை. மின்வெட்டு பிரச்சினையை சரி செய்ய பணிகள் நடைபெற்று வருகிறது" என்று கூறினார்.




■ தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்களை தமிழ் செய்தி வாசிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. சண்முகவேல், துணைத்தலைவர்கள் திரு.மனோஜ் குமார், திரு.கோபாலன், திருமதி கீதா, பொருளாளர் திரு.பாலசுப்ரமணி மற்றும் சங்கத்தின் நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

# "கல்வி எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் சக்தி; மகிழ்ச்சியாக கற்றுக் கொள்ளுங்கள்" முதல்வர் விஜய் வாழ்த்து

சென்னை: ஜூன்.5-

"கல்வி எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் சக்தி; மகிழ்ச்சியாக கற்றுக்கொள்ளுங்கள். வெற்றி உங்களைத் தேடி வரும்" என்று மாணவர்களுக்கு முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கோடை விடுமுறை முடிந்து அனைத்து விதமான பள்ளிகளும் இன்று (ஜூன் 4) திறக்கப்பட்டன. தமிழகத்தில் இந்தாண்டு சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த ஏப்ரல் 23ம் தேதி நடத்தப்பட்டது.

இதன் காரணமாக பள்ளி மாணவர்களுக்கான தேர்வுகள் வழக்கத்தைவிட முன்கூட்டியே நடத்தி முடிக்கப்பட்டன. அதன்படி பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் 10, 11, 12ம் வகுப்புகளுக்கு மார்ச் 2 முதல் ஏப்ரல் 6ம் தேதி வரையும், 1 முதல் 9ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஏப்ரல் 1 முதல் 16ம் தேதி வரையும் தேர்வுகள் நடத்தப்பட்டன.




தொடர்ந்து பள்ளி மாணவர்களுக்கு ஏப்ரல் 17ம் தேதி முதல் கோடை விடுமுறை விடப்பட்டது. இந்த நாட்களில் தமிழக அரசு சார்பில் மாணவர்கள் நலன் சார்ந்த சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன.

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் இன்று திறக்கப்பட்டன. இதனையொட்டி மாணவர்களுக்கு முதல்வர் விஜய் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், "இந்தக் கல்வி ஆண்டின் முதல் நாளை, புதிய நம்பிக்கையோடு தொடங்கும் என் அன்பிற்குரிய மாணவச் செல்வங்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

கல்விதான் உங்கள் எதிர்காலத்தை ஒளிமயமாக்கும் சக்தி. உயரிய கனவுகளை வளர்த்துக் கொள்ளுங்கள், அதற்கேற்ப கடினமாக உழையுங்கள். பள்ளிக்குச் செல்லும் ஒவ்வொரு நாளும் உங்கள் வாழ்க்கையில் முன்னேற்றமாக இருக்கட்டும். மகிழ்ச்சியாக கற்றுக்கொள்ளுங்கள், வெற்றி உங்களைத் தேடி வரும்!" என்று பதிவிட்டுள்ளார்.

# அண்ணாமலையின் ராஜினாமா கடிதம் எதுவும் எனக்கு வரவில்லை: நயினார் நாகேந்திரன்

திருநெல்வேலி: ஜூன்.5-

பாஜகவில் இருந்து விலகுவதற்கான அண்ணாமலையின் ராஜினாமா கடிதம் எதுவும் எனக்கு வரவில்லை என்று பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார். அப்போது, அண்ணாமலைக்கு இன்று பிறந்த நாள்; அவர் புதிய அரசியல் கட்சி தொடங்க இருக்கிறார் என செய்திகள் வருகின்றன; பாஜகவின் மாநில தலைவராக உங்கள் கருத்து என்ன என செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு பதில் அளித்த நயினார் நாகேந்திரன், "எனது அருமை சகோதரர் அண்ணாமலைக்கு இனிய பிறந்தநாள் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் ஆரோக்கியத்தோடும், மகிழ்ச்சியோடும் இருக்க கடவுள் அருள வேண்டும்.

புதிய கட்சி தொடங்குவது குறித்து அண்ணாமலை இதுவரை யாரிடமும் பேசவில்லை. நாங்களும் இது குறித்து அவரிடம் பேசவில்லை. பொதுவாக எப்போதும் போல கட்சி ரீதியாக நாங்கள் அவருடன் பேசிக்கொண்டிருக்கிறோம். சிறிய விஷயத்தைக்கூட பெரிய விஷயமாகக் காட்டுவது நமது ஊடகங்கள்தான்" என தெரிவித்தார்.

இரண்டு நாட்களில் பேசுவதாக அண்ணாமலையே கூறி இருந்தாரே என்ற கேள்விக்கு, "அப்படியானால் நீங்கள் அது குறித்து அவரிடம்தான் கேட்க வேண்டும்" என நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

அண்ணாமலை ராஜினாமா கடிதம் கொடுத்துள்ளாரா என்ற கேள்விக்கு, "மாநிலத் தலைவர் என்ற முறையில் இதுவரை என்னிடம் எந்த கடிதமும் வரவில்லை. ராஜினாமா தொடர்பாக இதுவரை அவர் என்னிடம் எதுவும் பேசவில்லை. கட்சி விவகாரம், குடும்ப விவகாரம் குறித்து நாங்கள் பேசிக்கொள்கிறோம். தேர்தலின்போதுகூட அண்ணாமலை தனி ஹெலிகாப்டரில் எல்லா தொகுதிகளுக்கும் சென்று பிரச்சாரம் செய்தார். எனவே, எங்களுக்குள் கருத்து வேறுபாடு எதுவும் இல்லை" என நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

முதல்வர் விஜய்யின் செயல்பாடு எவ்வாறு இருக்கிறது என்ற கேள்விக்கு, "முதல்வராக பதவியேற்ற பிறகு நன்றி தெரிவிப்பதற்காக விஜய் திருச்சி வந்திருந்தார். முன்னதாக சட்டப்பேரவையில் பேசும்போது, பெரும்பான்மை இல்லாவிட்டாலும், எங்கள் அரசு சிறுபான்மை அரசு என அவர் கூறினார். இது சிறுபான்மை அரசா, சிறுபான்மையினர் அரசா என்பது குறித்து அவர் விளக்க வேண்டும்.

தவெக அரசாங்கம் வந்து 23 நாட்கள் ஆகின்றன. ஆனால், முந்தைய திமுக அரசாங்கத்துக்கும் இந்த அரசாங்கத்துக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை. பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் இப்போதும் நாள்தோறும் நடக்கின்றன. அனைத்து இடங்களிலும் கஞ்சா விற்பனையும் நடந்து கொண்டிருக்கிறது. 15க்கும் மேற்பட்ட படுகொலைகள் நடந்துள்ளன. டாஸ்மாக் கடைகளில் இப்போதும் மாமுல் வாங்கப்படுகிறது. பாட்டிலுக்கு ரூ. 10 வாங்கலாம் என்று உயர் நீதிமன்றமே கூறி இருக்கிறது என அமைச்சரே கூறி இருக்கிறார். தேர்தலுக்கு முன் கரூரில் விஜய் பேசும்போது, பாட்டிலுக்கு 10 ரூபாய் என பாடினார். இப்போதும் பாட்டிலுக்கு 10 ரூபாய் வாங்கப்படுகிறது.

சென்னை அண்ணா சாலையில் உள்ள மின்சார வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் இருந்து ஹார்ட் டிஸ்க் காணாமல் போய்விட்டதாகக் கூறுகிறார்கள். டெண்டர் விட்டதில் ரூ.400 கோடிக்கும் மேல் ஊழல் என்கிறார்கள். திமுக ஆட்சி போய்விட்டது. தவெக ஆட்சியில் உள்ளது. இப்போது இதுபோன்று நடக்கிறது என்றால் அதற்கு யார் பொறுப்பேற்க வேண்டும்" என குறிப்பிட்டார்.

உங்களை மத்திய அமைச்சராக நியமிக்கப்போவதாகக் கூறப்படுகிறதே என்ற கேள்விக்கு, "நான் டெல்லி சென்று அமைப்பு பொதுச் செயலாளரைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்தேன். என்னிடம் இதுபற்றி எதுவும் சொல்லவில்லை. ஊடகங்கள்தான் இப்படி செய்தி வெளியிடுகின்றன" என நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் வாய்ப்பு கிடைத்தும் அதை தாவெக, காங்கிரஸ் கட்சிக்கு கொடுத்திருக்கிறதே என்ற கேள்விக்கு, "காங்கிரஸ் கட்சியின் பினாமி கட்சி போலத்தான் தாவெக உள்ளது. பதவியேற்பின்போதும், அமைச்சர்களுடனான குழு புகைப்படத்தின்போதும் ராகுல் காந்தி இருந்தார். எனவே, காங்கிரசின் மறு பிம்பமாக தவெக உள்ளது" நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.



நீலகிரி மாவட்டம்



■ நீலகிரி மாவட்டம், குந்தா வட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை சார்பில், நடைபெற்ற வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) முதல் நாள் நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கலந்து கொண்டு, பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 119 மனுக்களை பெற்றுக் கொண்டார்



■ முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு. திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம், பாச்சல் ஊராட்சி, ஆசிரியர்நகர் பேருந்து நிறுத்தம் அருகில் (3062026) அன்று தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய செயலாளர், மாவட்ட கவுன்சிலர், கவிதாதண்டபாணி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஜோலார்பேட்டை மத்திய ஒன்றிய துணை செயலாளர்கள் றி.திருமலை, இந்திரஜித், தமிழரசி அரிதாஸ், மற்றும் கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி நிர்வாகிகள், கிளை கழக செயலாளர், கிளை பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் உடன் இருந்தனர்



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், 10 மற்றும் 12ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு முடிவுகள் குறித்த மீளாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., தலைமையில் இன்று (03.06.2026) நடைபெற்றது. உடன் முதன்மைக் கல்வி அலுவலர் இரா.புண்ணியகோட்டி, மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) சத்தியபிரபா, மாவட்டக் கல்வி அலுவலர் என்.ராஜன், மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார்) நேசபிரபா, அரசு மற்றும் நிதியுதவி உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் உள்ளனர்.



## ஆற்காடு பேருந்து நிலையம் அருகில் ஹோட்டல் ஆர்யாஸ் திறப்பு விழா

ராணிப்பேட்டை, ஜூன்.5-

ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் எஸ் எம் சுகுமார் பங்கேற்பு. ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பேருந்து நிலையம் அருகாமையில் கண்ணன் பூங்கா எதிரில் ஹோட்டல் ஆர்யாஸ் திறப்பு விழா விமர்சையாக நடைபெற்றது இந்த நிகழ்ச்சிக்கு ராணிப்பேட்டை மாவட்ட வணிகர் சங்க தலைவர் பொன் கூ சரவணன் தலைமை தாங்கினார். ராணிப்பேட்டை மாவட்ட தலைவர் எஸ் பத்மநாபன் அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் எஸ் எம் சுகுமார் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து குத்து விளக்கு ஏற்றி வாழ்த்தினார். இதில் வாலாஜா தேவி இனிப்பகம் உரிமையாளர் டபிள்யு ஜி முரளி பி என் ஜெயராஜ் அக்ஷய்ராஜ் ஹோட்டல் சங்க நகர தலைவர் ஸ்ரீதர் மற்றும் சங்க நிர்வாகிகள் ஹோட்டல் சங்க நிர்வாகிகள் பொதுமக்கள் மற்றும் வாடிக்கை யாளர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டம் சமூகநீதி விடுதிகளில் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

தேனி, ஜூன்.5-

தேனி மாவட்டம், கோடைவிடுமுறை நிறைவுபெற்று நாளை பள்ளிகள் திறக்கப்பட உள்ளதை முன்னிட்டு, கோட்டூர் மற்றும் சின்னமனூர் பகுதியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்காக செயல்பட்டுவரும் சமூகநீதி விடுதிகளின் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கோட்டூர் பகுதியில் செயல்பட்டு வரும் மாணவிகளுக்கான சமூகநீதி விடுதி மற்றும் சின்னமனூர் பகுதியில் செயல்பட்டு வரும் மாணவர்களுக்கான சமூகநீதி விடுதிகளில் மாணவர்களின் எண்ணிக்கை, தங்கும் வசதிகள், அறைகளின்



பராமரிப்பு நிலை, குடிநீர் மற்றும் கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, விடுதியின் சமையலறையை பார்வையிட்டு, மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவு தயாரிப்பு முறைகள் மற்றும் உணவுப் பொருட்களின் இருப்பு குறித்தும், விடுதியில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமிராக்களின் செயல்பாடுகள் மற்றும் கண்காணிப்பு வசதிகள் குறித்தும், மாணவர்களின் வருகைப் பதிவை கண்காணிக்கும் பயோமெட்ரிக் கருவியின் செயல்பாடு குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். மாணவர்கள் பாதுகாப்பாக, சுகாதாரமான சூழலில் தங்கி கல்வி பயில்வதை உறுதி செய்ய வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, உப்பார்பட்டி தப்புக்குண்டு பூமலைக்குண்டு ஆகிய கிராமங்களை உள்ளடக்கியப் பகுதியில் அமைந்துள்ள சிப்காட் உணவுப்பூங்காவினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, உணவுப் பூங்காவில் தொழில் நிறுவனங்கள் செயல்படுவதற்கு தேவையான சாலைவசதிகள், தெருவிளக்குகள், மின்சார வசதிகள், உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகளின் நிலை குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், உணவு பூங்காவிற்கு, முல்லைப் பெரியாற்றிலிருந்து (கிணறு மற்றும் இயல்பு நீர் சேகரிப்புத் தொட்டி மூலம்) பிரதான குழாய் வழியாக சுத்திகரிப்பு நிலையத்தில் (Water Treatment Plant) சுத்திகரிப்பு செய்யப்பட்டு தினசரி குடிநீர் வழங்கப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தொழில் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். இவ்வாய்வில், திட்ட அலுவலர் (சிப்காட்) சித்திரைவேல், செயற்பொறியாளர் (குடிநீர் வடிகால் வாரியம்).கண்ணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், வட்டாட்சியர் (உத்தமபாளையம்) பாலசண்முகம், உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



## வடகரை ஸ்ரீ செங்கோதையம்மன் சமேத ஸ்ரீ போத்தராஜா ஆலயத்தில் 14ம் ஆண்டு வைகாசி விசாகம் திருவிழா

மாதவரம், ஜீன்.5-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை கிராமம் ஜெ.ஜெ.நகரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ செங்கோதையம்மன் சமேத ஸ்ரீ போத்தராஜா ஆலயத்தில் 14ம் ஆண்டு வைகாசி விசாகம் திருவிழா ஆலய விழாகுழுவினர்கள் மற்றும் வடகரை கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு விமர்சியாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் பந்தக்கால் நடுதல், காப்புகட்டுதல், மஹா கணபதி ஹோமம், அருள்மிகு கங்கையம்மன் ஆலயத்திலிருந்து பக்தர்கள் பால்குடம் எடுத்து கிராமத்தின் முக்கிய வீதிகள் வழியாக மேளதாளத்துடன் வந்து அருள்மிகு ஸ்ரீ செங்கோதையம்மன் சமேத ஸ்ரீ போத்தராஜா சுவாமிக்கு பால் அபிஷேகம் செய்து வண்ணமலர்கள் மற்றும் சந்தனகாப்பு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து பக்தர்கள் வாடைபொங்கல் வைத்தல், சுவாமிக்கு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது. இதில் சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இவ்விழாவை முன்னிட்டு ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கினர்.

## உரிமை கோரப்படாத வாகனங்கள் ஏலம்

தேனி, ஜூன்.5-

தேனி மாவட்டம், பெரியகுளம் மற்றும் உத்தமபாளையம் வருவாய் கோட்டங்களுக்கு உட்பட்ட காவல் நிலையங்களில் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டு, குற்றவியல் நடைமுறைசட்டம் 102– இன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, உரிமை கோரப்படாத வாகனங்களை அரசுக்கு ஆதாயம் செய்யும் பொருட்டு, பொது ஏலமிட்டு விற்பனை செய்வதற்கு தேனி மாவட்ட காவல்துறை





மைதானத்தில் வைத்து 10.06.2026 அன்று முற்பகல் 11.00 மணியளவில் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவரால் ஒத்திவைக்கக்கூடிய மற்றொரு நாளில் பகிரங்கமாக ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது. ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் ரூ.1000/ முன்பணம் ஏலத்தேதிக்கு முன்செலுத்தி ரசீது பெற்றிருக்க வேண்டும். அதிக தொகைக்கு ஏலம் கேட்பவருக்கு ஏலம் முடிவு செய்யப்படும். அதிக தொகைக்கு ஏலம் கேட்டவர் ஏலம் முடிவடைந்தவுடன் ஏலத்தொகையுடன் 18% GST வரி சேர்த்து செலுத்த வேண்டும். வாகன ஏலம் மற்றும் உறுதிப்படுத்தும் குழு (Auctioning and conformation committee)வினரால் ஏலம் உறுதி செய்யப்பட்ட பின்னரே ஏலப்பொருட்கள் ஏலதாரரிடம் ஒப்படைக்கப்படும். ஏலத்தை நிறுத்தி வைக்கவோ அல்லது ஏல தேதியினை தள்ளி வைக்கவோ வாகன ஏலம் மற்றும் உறுதிப்படுத்தும் (Auctioning and conformation committee) குழுவிற்கு அதிகாரம் உள்ளது.மேற்படி வாகனங்களின் பட்டியலை https://theni.nic.in இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.





■ திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் 03.06.2026 அன்று வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, இ.கா.ப. அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 44 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்தார்கள்.



■ சூளகிரி ஒன்றியத்தில் பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் தூய்மைப்படுத்தும் பணிகள் தீவிரம்கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் புதிய கல்வியாண்டை முன்னிட்டு தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அறிவுரையின்படி, பள்ளி வகுப்பறைகள் மற்றும் வளாகங்கள் சுத்தம் செய்யப்பட்டன.பங்கனஹள்ளி ஊராட்சியில் உள்ள கூலியம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற பணிகளை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆர்.கலா மற்றும் விஜயா ஆய்வு செய்தனர்.பள்ளிகள் திறப்பை முன்னிட்டு மாணவர்களுக்கு சுத்தமான மற்றும் பாதுகாப்பான சூழல் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## முன்னாள் முதல்வர், கலைஞர் கருணாநிதி 103 வது பிறந்தநாளை முன்னிட்டு மேடவாக்கம் ஊராட்சியில் அன்னதானம்

சோழிங்கநல்லூர், ஜூன்.5-

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர்., சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினருமான,உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டிடுதலின்படி, மாவட்ட கழகச் செயலாளர்.,முன்னாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மா.சுப்பிரமணியன்,

சோழிங்கநல்லூர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், எஸ்.அரவிந்த் ரமேஷ் , ஒன்றிய கழகச் செயலாளர் , வெங்கடேசன் ஆலோசனைப்படி,சோழிங்கநல்லூர்



தொகுதிக்குட்பட்ட மேடவாக்கம் ஊராட்சியில் கலைஞர் கருணாநிதி 103 வது பிறந்தநாளை முன்னிட்டு மேடவாக்கம் ஊராட்சியில் அன்னதானம் ஊராட்சி மன்ற தலைவர்.,சிவபூஷணம்ரவி மற்றும் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் .,ஆர். எஸ். லோகேஸ்வவரா தலைமையில் கழக கொடியேற்றி வைத்து இனிப்பு மற்றும் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

உடன்: ஒன்றிய கழகத் துணைச் செயலாளர் H. D.போஸ், ஊராட்சி மன்ற துணைத் தலைவர்., ஷி.கோபு ராமையா நகர் கிளைக் கழகச் செயலாளர் .,ஷி.சுரேஷ், வடக்குப்பட்டு கிளை கழக செயலாளர், ஸி.வினோத்குமார், ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்., நி.லோகேஷ், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்., S.கிஷோர் ஒன்றிய வழக்கறிஞர், D.ஜஸ்டின், மேடவாக்கம் இளைஞரணி அமைப்பாளர்., K.ராஜேஷ், துணை அமைப்பாளர்கள், வி .றி .N.பாஸ்கர், MNP ரமேஷ் , S.கோபாலகிருஷ்ணன் L .மூர்த்தி தாவூத் நகர் இளைஞரணி அமைப்பாளர்., M. ஸி.ரமேஷ், CRM முருகன், ரங்கா, மோகித், தசரதரன், மனோகரன், சுதாகர், ஏழுமலை, ஆகாஷ், வசந்தகுமார் மதியழகன், சுப்பிரமணியன், அன்பு, மோகன், ஸ்ரீகாந்த் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.





## வெலிங்டன் கண்டோண்மென்ட் நகரிய சார்பில் கலைஞர் 103 வது பிறந்த நாள் விழா

வெலிங்டன், ஜூன்.5-

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் கண்டோண்மெண்ட் நகரிய சார்பில் தலைவர் கலைஞர் 103 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்ப ட்டதுகண்டோண்மெண்ட் நகரிய.செயலாளர் ஐ.மார்ட்டின் தலைமையில் வெலிங்டன் மற்றும் பாய்ஸ் கம்பெனி பகுதியில் பிறந்தநாள் விழா நடைபெற்றதுநிகழ்ச்சிக்கு வெலிங்டன் கண்டோண்மெண்ட் நகரிய அவைத்தலைவர் சர்தார் பாய்,நகரிய துணை செயலாளர் ஜோசப் ஜெரால்டு, கிளாரா,ாபுவில்லேஜ் கிளை செயலாளர் ஜோசப், நகரிய இளைஞர் அணி அமைப்பாளர் ரகுநாதன், மாவட்ட பிரதிநிதி மூர்த்தி, நகரிய பொருளாரர் பாலன், 1 வது வார்டு கிளை செயலாளர் ரிஸ்வான், பொருளாலர் சையது சபீக், 1வது வார்டு துணை செயலாளர் முரளி, கிளை அவைத்தலைவர் பிரான்சிஸ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் இப்ராஹிம், ஙிலிகி 2 ஞானவரம், நகரிய ஐ. டி விங் அமைப்பாளர் தினேஷ் மகளிர் அணி காஞ் சனா,கௌரி, ஜெயரோஸ், கங்கா, பியூலா அனைவரும் தலைவர் கலைஞர் அவர்களின் தி ருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தியும், இனிப்பு வழங்கியும் பிறந்தநாளை சிறப்பித்தனர்.




## விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் 1000 பேருக்கு அறுசுவை பிரியாணி வழங்கல்

மாதவரம், ஜீன்.5-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்றம் அருகே மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் மு.கருணாநிதியின் 103வது பிறந்த நாள் விழா சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். சுதர்சனம் ஆலோசனையின் பேரில் புழல் ஒன்றிய முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் பெ.சரவணன், விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவரும் மகளிர் தொண்டரணி மாவட்ட துணை அமைப்பாளருமான ச.பாரதிசரவணன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.நிகழ்ச்சியில் மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் மு.கருணாநிதியின் திருஉருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினர். பின்னர் சுமார் 1000 பேருக்கு அறுசுவை உணவு பிரியாணி வழங்கினர். இதில் ஊராட்சி மன்ற முன்னாள் துணைத்தலைவர் கலாவதி நந்தகுமார் மற்றும் நிர்வாகிகள் மல்லிராஜா, டில்லி, பரிமளசெல்வம், கோவிந்தராஜ், திருநாவுகரசு, ரவி, ராமு, சதீஷ், சத்தியசீலன், நாகராஜ், எழிலன், கோமிரமணன், கபிலன், அப்பன்ராஜ், சக்திவேல், அருண், ஜான்சன், வழக்கறிஞர் ரோகேஷ், ரஷியா, வசந்தி, வேல்விழி, ஸ்ரீபிரியா, விக்னேஷ்வரி, ஜான்சி, சினேகா, பிரபு, கௌதமன், கிரி,தயாநிதி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்

## முன்னாள் முதல்வர், கலைஞர் கருணாநிதி 103 வது பிறந்தநாளை முன்னிட்டு மதுரபாக்கம் ஊராட்சியில் அன்னதானம்

மதுரபாக்கம், ஜூன் .5-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் அடுத்த மதுரப்பாக்கம் ஊராட்சியில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், மு. க. ஸ்டாலின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர்., சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினருமான,உதயநிதி ஸ்டாலின் மற்றும் முன்னாள் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர், எஸ். ஆர் .ராஜா வழிகாட்டுதலின்படி, மதுரபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்., வேல்முருகன் மற்றும் மதுரப்பாக்கம் ,அகரம் தென், திருவஞ் சேரி, ஒட்டியம்பாக்கம் ஊராட்சிகளின் ஒன்றிய




கவுன்சிலரமான., அமுதா வேல்முருகன் தலைமையில் கழகக் கொடியேற்றி, கேக் வெட்டி, 1000 பேருக்கு அருஞ்சுவை விருந்து சிக்கன் பிரியாணி வழங்கி சிறப்பித்தனர்.

## தேனி மாவட்டம்வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்டஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது

தேனி, ஜூன்.5-

தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் வளர்ச்சிப்பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி).ரஜத் பீடன், முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து வளர்ச்சித் திட்டங்கள், குடிநீர் வசதிகள், சாலை மேம்பாட்டுப் பணிகள் உள்ளிட்ட அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.



பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளும் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தரமாக நிறைவேற்றப்பட வேண்டும் எனவும், அலுவலர்கள் தொடர்ந்து கள ஆய்வுகளை மேற்கொண்டு பணிகளின் முன்னேற்றத்தை கண்காணிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், நீர்நிலைகள் மேம்பாடு, மழைநீர் சேமிப்பு, மரக்கன்றுகள் நடுதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற பணிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என தெரிவித்தார்.குறிப்பாக, பள்ளி மாணவர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் காலை உணவுத்திட்டம் மற்றும் மதிய உணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், மாணவர்களுக்கு தரமான, சத்தான மற்றும் சுகாதாரமான உணவுகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும், சமையல் எரிவாயு உருளைகள் (Gas Cylinder), தட்டுப்பாடு இல்லாத வகையில் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் அறிவுறுத்தினார்.மேலும், அங்கன்வாடி மையங்களில் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஊட்டச்சத்து சேவைகள் குறித்தும், பேருந்து நிறுத்தங்களின் பராமரிப்பு மற்றும் தூய்மை குறித்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். அதனைத்தொடர்ந்து பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. நீர்வரத்து கால்வாய்கள், வடிகால்கள் மற்றும் நீர்நிலைகளை சீரமைத்து மழைநீர் தேங்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்பொதுமக்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான சேவைகளை வழங்க அனைத்துத் துறை அலுவலர்களும் பொறுப்புணர்வுடன் செயலாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.இக்கூட்டத்தில் துணை இயக்குநர் (ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம்).விவேக் பரஸ்நாத் யாதவ், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், உதவி வனப்பாதுகாவலர் சாய்சரண் ரெட்டி, உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## குன்னூர் நகர திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 103 வது பிறந்த நாள் விழா

குன்னூர், ஜூன்.5-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு குன்னூர் நகர திமுக சார்பில்,பேருந்து நிலையத்தில் அமையப் பெற்றுள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகில்முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் உயர்திரு. பா.மு. முபாரக் தலைமையேற்று தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்தும், மரியாதை செலுத்தியும், இனிப்புகளை வழங்கினார்.

நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை குன்னூர் நகர கழக செயலாளர் எம்.இராமசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்றார். இந்த நிகழ்ச்சியில் மாநில சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் இரா.அன்வர் கான் மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளரும் குன்னூர் நகர மன்ற துணைத்தலைவர் பா.மு. வாசிம் ராஜா,செயற்குழு உறுப்பினர் சுனிதா நேரு பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தொடர்ந்து கழக நிர்வாகிகள் அனைவரும் தலைவர் கலைஞர் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர் இந்த நிகழ்ச்சியில் நகர கழக நிர்வாகிகள் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் நகர மன்ற உறுப்பினர்கள் கழக செயல் வீரர்கள் கழக நிர்வாகிள் திரளாக கலந்துக்கொண்டனர்.



## மாணவர்களுக்கு வாழ்த்தும் பரிசும் வழங்கி ஊக்குவித்த தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள்

தோவளை, ஜூன்.5-

தோவளை அரசு பள்ளிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பாராட்டு நிகழ்ச்சிகன்னியாகுமரி மாவட்டம் தோவளையில் உள்ள அரசு தொடக்கப் பள்ளி மற்றும் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வாழ்த்துகளும் பரிசுகளும் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.தமிழக வெற்றிக் கழகத்தின் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். மாதவன் மற்றும் மாவட்ட இணைச் செயலாளர் எம். பிரேம்குமார் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தோவளை ஊராட்சி செயலாளர் நம்பி முன்னிலை வகித்தார்.நிகழ்ச்சியின் போது, பள்ளிகளில் கல்வி பயிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டதுடன், ஊக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன. மாணவர்கள் கல்வியில் தொடர்ந்து சிறந்து விளங்க வேண்டும் என்ற நோக்கில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.பள்ளி திறப்பு காலத்தை முன்னிட்டு மாணவர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் இந்த நிகழ்வு அமைந்தது. கல்வி மட்டுமல்லாமல், ஒழுக்கம் மற்றும் சமூகப் பொறுப்புணர்வுடனும் மாணவர்கள் வளர வேண்டும் என்பதன் முக்கியத்துவமும் நிகழ்வில் வலியுறுத்தப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழகத்தின் குமரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உள்ளூர் கட்சி பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தினர்

## புள்ளிலையன் ஊராட்சியில் மு.கருணாநிதி பிறந்த நாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கல்

மாதவரம், ஜீன்.5-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் புள்ளிலயன் ஊராட்சியில் கழகத் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் முன்னாள் துணை முதல் அமைச்சர் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க மறைந்த முன்னாள் தமிழ்நாடு முதல்வர் டாக்டர் மு.கருணாநிதியின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். சுதர்சனம் வழிகாட்டுதலின்படி புழல் ஊராட்சி ஒன்றியம் புள்ளிலயன் ஊராட்சி திமுக சார்பில் மாவட்ட பிரதிநிதி மூ.ரமேஷ் மற்றும் முன்னாள்





புள்ளிலயன் ஊராட்சி மன்ற தலைவர் வழக்கறிஞர் தமிழ்செல்வி ரமேஷ் ஏற்பாட்டில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் முதலில் வடகரை அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளிகள் புதுநகர் லோட்டஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி மற்றும் ஹோலி சைல்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் 2026 ஆம் ஆண்டு நடைபெற்ற பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் பள்ளிகள் அளவில் முதல் மூன்று இடங்களை பெற்ற 24 மாணவ மாணவியர்களுக்கு பொன்னாடை போர்த்தி புத்தகம் வழங்கி சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டது. அடுத்து செம்மொழி நாயகர் முத்தமிழ் அறிஞர் பெரிதும் மதிக்கும் பத்திரிக்கை நண்பர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு ஊராட்சி பொதுமக்கள் 300 பேருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் புழல் ஒன்றிய பொறுப்பாளர் அற்புதராஜ், கிளை கழக செயலாளர் ராமச்சந்திரன், ஜனார்த்தனன், சதீஷ் மற்றும் சரவணன், திலீப், செல்வம், திவாகரன், யோகேஷ், இளையா, வரதன், ஷேக் அலாவுதீன், ராஜா, முஹம்மது, ஜெகன் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் லோட்டஸ் பள்ளி நிறுவனர் அருணாச்சலம் மாதவரம் சமூக சேவகர் டாக்டர் தேவன்பு ஆகியோர் கலந்து கொண்டனர்.



## தனியார் பள்ளிகள் கட்டணப் பட்டியலை வெளியிடாதது ஏன்? - சிவகங்கையில் பெற்றோர்கள் கேள்வி

சிவகங்கை, ஜூன்.05-

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பல தனியார் பள்ளிகளில் நடப்பு கல்வியாண்டிற்கான கட்டண உயர்வு அதிகரித்துள்ளதாக பெற்றோர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். பள்ளிகளின் கட்டண விவரங்கள் பொது மக்கள் பார்வைக்கு வெளிப்படையாக வெளியிடப்படாததால், பெற்றோர்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வருகிறது. தனியார் பள்ளிகள் வசூலிக்கும் கட்டண விவரங்களை கல்வித்துறை இணையதளம் மற்றும் பள்ளி வளாகங்களில் கட்டாயமாக வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன் மூலம் தேவையற்ற கட்டண வசூலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் விளக்கம் கேட்கப்பட்டபோது உரிய தகவல் வழங்கப்படவில்லை என கூறப்படுகிறது. இதனால் கல்வித்துறையின் செயல்பாடு குறித்து சமூக ஆர்வலர்கள் மற்றும் பெற்றோர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். கல்வித்துறையில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யவும், தனியார் பள்ளிகளின் கட்டண நிர்ணயத்தை கண்காணிக்கவும் மாவட்ட நிர்வாகம் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் வலியுறுத்தியுள்ளனர்.




■ மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், முதலைக்குளம் கிராமத்தில் அமைந்துள்ள சமணர் படுக்கையில் அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் ப. ஆகாஷ், .,ஆய்வு செய்து பார்வையிட்டார்



## திருப்பரங்குன்றத்தில் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் லோகேஷ் தமிழ்ச்செல்வன் திடீர் ஆய்வு

மதுரை, ஜூன்.5-

திருப்பரங்குன்றம் பத்திரப்பதிவு அலுவலகத்தில் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் இன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். தமிழக அமைச்சரவையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு அமைச்சர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர். தமிழக முதல்வர் துறை ரீதியாக கடந்த காலங்களில் நடைபெற்ற நிர்வாக சீர்கேடு தொடர்பாக வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என அறிவிப்பு வெளியிட்டு இருந்தார். அது தொடர்பான பணிகளில் அமைச்சர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். மேலும் அந்தந்த துறை அமைச்சர்கள் அவர்கள் துறை சார்ந்த இடங்களுக்கு சென்றுதிடீர்



ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் திருப்பரங்குன்றம் பத்திரப்பதிவு அலுவலகத்தில் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் லோகேஷ் தமிழ்ச்செல்வன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து அவர் திருப்பரங்குன்றம் பத்திரப்பதிவு அலுவலகத்தில் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது குறித்தும் அலுவலர்களுக்கு வேண்டிய வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும் இந்த பத்திரபதிவு அலுவலகத்திற்கு உட்பட்ட உட்பிரிவு கிராமங்கள் குறித்தும் விசாரித்து சென்றார்.

## ஆதிதிராவிடர் நலத்துறையின் வரலாற்று மாற்றமும், சமூக நீதித்துறை அமைச்சரின் களப்பணியும்!

சென்னை, ஜூன்.5-

தமிழகத்தில் கடந்த காலங்களில் "ஆதி திராவிடர் நலத்துறை" என்பது அமைச்சரவையில் பெரிய அளவில் முக்கியத்துவம் பெறாத, வாய் பேச முடியாத ஒரு துறையாகவே தி.மு.க மற்றும் அ.தி.மு.க ஆட்சிகளில் சுருக்கப்பட்டிருந்தது. அத்துறையின் அமைச்சர்கள் யார் என்றே தேட வேண்டிய நிலைதான் நிலவி வந்தது.ஆனால், தற்போது அந்த நிலை முற்றிலும் மாறியுள்ளது. பட்டியல் சமூக மக்களுக்கு எங்கு வன்கொடுமை நடந்தாலும், சமூக



நீதித்துறை அமைச்சர் முதல் ஆளாகப் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து அரணாக நிற்கிறார். அதுமட்டுமின்றி, "சமூக நீதித்துறை" மாணவர் விடுதிகளை நேரில் ஆய்வு செய்து, மாணவமாணவியர்களின் நீண்டகாலக் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றி வருகிறார். அடுத்த கட்டமாக, ஆணவப் படுகொலைகளுக்கு எதிராகக் கடுமையான புதிய சட்டம் கொண்டு வரப்பட உள்ளது சமூக நீதி வரலாற்றில் மிக முக்கிய நகர்வாகும். தனித்தொகுதி எம்.எல்.ஏக்களின் மௌனமும் மாறியுள்ள களநிலவரமும்

பட்டியல் சமூகத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே போட்டியிட முடியும் என்ற விதியின் கீழ் உள்ள தனித் தொகுதிகளில் (ரிசர்வ்) வெற்றி பெறும் எம்.எல்.ஏக்கள், தங்கள் தொகுதியிலேயே பட்டியல் சமூக மக்களுக்கு வன்கொடுமை நடந்தால் கூட, ஒரு ஆறுதல் சொல்லக் கூட வரமாட்டார்கள். சாதி இந்துக்களின் மனநிலையைப் பிரதிபலித்து, பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டுகொள்ளாமல் கடந்து செல்லும் போக்குதான் இதுவரை இருந்தது."தற்போது அந்த நிலை முற்றிலும் மாறியுள்ளது. எங்கு வன்கொடுமை நடந்தாலும், மாண்புமிகு சமூக நீதித்துறை அமைச்சர் அண்ணன் வன்னியரசு அவர்கள் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியாக இருந்தாலும் உடனே நேரில் களத்திற்குச் சென்று மக்களின் துயர் துடைக்கிறார்."இதுதான் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், எழுச்சித் தமிழருமான முனைவர் தொல்காப்பியன் திருமாவளவன் அரசியல் வளர்ப்பு!மக்களுக்கான இந்த அர்ப்பணிப்புமிக்க களப்பணிகளுக்காக, சமூக நீதித்துறை அமைச்சர் வன்னியரசுக்கு சிவகங்கை மாவட்டம் விசிக மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் வெ.பாலையா தனது நெஞ் சார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



■ மதுரை மாநகராட்சி மண்டலம் 3 , அரசரடி பகுதியில் உள்ள நீரேற்று நிலையத்தில் மாநகராட்சி ஆணையாளர் கௌரவ குமார்,இ.ஆ.ப., நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



■ மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக செயல்பாடுகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து மாவட்ட ஆட்சியர் . ப. ஆகாஷ், இ.ஆ.ப., ஆய்வு மேற்கொண்டார்.இந்த ஆய்வின் போது இ.சேவை மையத்தில் மனுக்கள் பதிவு செய்ய வந்திருந்த பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஸ் குமார் இ.ஆ.ப., உடன் உள்ளார்.

## மதுரை மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் அரிய சாதனை - உயிருக்கு ஆபத்தான SCID நோயிலிருந்து இரட்டைக் குழந்தைகள் மீண்டனர்

மதுரை, ஜூன்.5-

தென் தமிழக மருத்துவ வரலாற்றில் புதிய மைல்கல்லாக, மதுரையில் உள்ள மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, கடுமையான நோய் எதிர்ப்பு குறைபாடு (SCID) பாதிப்புடன் பிறந்த 7 மாத இரட்டைக் குழந்தைகளுக்கு மிகவும் சிக்கலான எலும்பு மஜ்ஜை ஸ்டெம் செல் மாற்று அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு சாதனை படைத்துள்ளது. உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய அரிய மரபணு நோயான SCID



காரணமாக, சாதாரண தொற்றுகளைக்கூட எதிர்கொள்ள முடியாத நிலையில் இருந்த குழந்தைகளுக்கு, அவர்களின் தந்தையிடமிருந்து பாதியளவு பொருந்திய ஸ்டெம் செல்கள் பெறப்பட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.இந்த அறுவை சிகிச்சையில் பயன்படுத்தப்பட்ட "டிசிஆர் ஆல்ஃபாபீட்டா குறைப்பு" என்ற நவீன தொழில்நுட்பம், உடலின் திசுக்களைத் தாக்கும் ஆபத்தான நோய் எதிர்ப்பு அணுக்களை மட்டும் நீக்கி, நன்மை பயக்கும் அணுக்களை பாதுகாப்பதால் சிகிச்சை வெற்றிகரமாக அமைய உதவியது.சிகிச்சைக்குப் பிறகு இரு குழந்தைகளும் நல்ல முன்னேற்றத்துடன் குணமடைந்து வருவதாக மருத்துவமனை தெரிவித்துள்ளது. இச்சாதனையை இரத்தவியல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சைத் துறைத் தலைவர் டாக்டர் காசி விஸ்வநாதன் தலைமையிலான மருத்துவக் குழு நிகழ்த்தியுள்ளது.

இதுகுறித்து டாக்டர் காசி விஸ்வநாதன் கூறுகையில், "உயிருக்கு ஆபத்தான பிறவி நோய் எதிர்ப்பு குறைபாடுகளால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு இந்த சிகிச்சை புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. முழுமையாக பொருந்திய கொடையாளர் இல்லாத சூழலிலும், நவீன தொழில்நுட்பம் மூலம் உயிர் காக்கும் சிகிச்சையை வெற்றிகரமாக வழங்க முடிந்துள்ளது" என்றார். மருத்துவ உலகின் கவனத்தை ஈர்த்துள்ள இந்த சாதனை, தென் தமிழகத்தில் உலகத் தர மருத்துவ சேவைகள் கிடைக்கின்றன என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது.



■ கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் பள்ளிக்கு வந்த முதலாம் வகுப்பு மாணவ குழந்தைகளுக்கு,மாவட்ட ஆட்சியர் பிரதாப் நேரில் வந்து மாலை அணிவித்து,நோட்டு புத்தகம் வழங்கி பலூன் கொடுத்து வரவேற்புகாலை பொழுது மழைத்துளி தூவி மாணவச் செல்வங்களை வரவேற்றது போல் உணர்வதாக மாவட்ட ஆட்சியர்.பிரதாப் பேச்சு.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பாக திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 (Solid Waste Management Rules, 2026) தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரிய மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் முத்துராஜ், உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார், ஒசூர் மாநகர நல அலுவலர் மரு.அஜிதா மற்றும் கிருஷ்ணகிரி நகராட்சி, பேரூராட்சி செயல் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.




Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161